## தேயிலை ஆராய்ச்சி சபை – 2017

-----------------------------------------------------

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து தேயிலை ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 54,850,144 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 72 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தனித்தனியாக பிரிக்கக் கூடிய சொத்துக்களாக உள்ளதுடன் அவை வெவ்வேறாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 232,273,791 கிரயமான காணிகளும் கட்டிடங்களும் சம்பந்தமாக அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் ஏதாவது நிரந்தர கொடுக்கல் வாங்கல்கள் ஒன்று நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையை உள்ளடக்கவில்லையாயின் அதன் போது மிகவும் பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அது பற்றி குறிப்பிடப்பட்டு கணக்கீட்டு கொள்கையைத் தயாரித்து அதனை பின்பற்ற வேண்டிய போதிலும் சபையினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்தல் சம்பந்தமாக கணக்கீட்டுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,404,163 பெறுமதியான கட்புலனாகாத சொத்துக்களை காலக்கழிவு செய்து கணக்கீடு செய்தல்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 132,362,100 கிரயமான தேயிலைப் பயிர்களை முதிர்ச்சியடைந்த முதிர்ச்சியடையாதவையாக வகைப்படுத்தப்பட்டு தனித்தனியாக இனங்காண்தலும் அத்தேயிலைப் பயிர்களின் ஆயுள் நிலைமை தொடர்பாக கருத்தில் கொண்டு கணக்கீடு செய்தலும்,

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகளை மேற்கொள்வதற்காக மூலதன மானியமாக ரூபா 42,973,544 தொகை வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 42,701,640 ஆக இருந்தனால் ரூபா 271,904 மேலதிகமாக வருமானத்திற்கு கொண்டு வந்ததன் காரணமாக இந்த அளவால் சபையின் பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தேயிலைத் தொழிற்சாலைகளில் ஆண்டின் போது விற்கப்படாத பூர்த்தியான தேயிலைகளை இறுதி இருப்பாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான தேயிலை விற்பனை வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 6,201,289 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இரத்தினக்கல் அகழ்வதற்காக ஏல விற்பனை செய்வதற்கு மீளாய்வாண்டின் போது இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு புனித ஜோக்கியம் தோட்டத்தின் காணி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அதிகார சபையிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 239,591 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அக்காணியை விடுவிப்பது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது அடிப்படைச் சம்பளத்திற்கு வாழ்க்கைச் செலவுப் படியைச் சேர்த்து பங்களிப்பை கணிப்பீடு செய்யாததன் காரணமாக பதவியனியினர் மற்றும் வேலையாட்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாத ரூபா 37,316,860 தொகையை மீளாய்வாண்டின் போது அனுப்பி வைக்கும் போது முன்னைய ஆண்டு செம்மையாக்கல்களாக பதிவு செய்யப்படாது ஆண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) சபையினால் லெமீலியா தேயிலைத் தொழிற்சாலையின் இயந்திரங்கள் 2003 ஆம் ஆண்டின் போது ரூபா 1,010,100 தொகைக்கு விற்றுத் தீர்க்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த இயந்திரங்களின் கிரயம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான காணிகளில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக 5654 பயிர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமான ஒரு பஸ் வண்டியின் ஆசனங்களைத் திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 287,200 தொகையும் அந்த வாகனத்திற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்குச் செலவு செய்யப்பட்ட ரூபா 252,126 தொகையும் செலவுகளாக கணக்கீடு செய்யப்படாது மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஏ) புனித ஜோகிம் தேயிலைத் தொழிற்சாலையின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் விற்கப்படாத பூர்த்தியான தேயிலை இருப்பின் பெறுமதி ரூபா 12,866,373 ஆக இருந்தும் ரூபா 2,246,711 ஆக கணக்குகள் தயாரிக்கப்பட்ட திகதியில் காணப்பட்ட பௌதீக இருப்பு பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

புனித கும்பஸ் தேயிலைத் தொழிற்சாலையின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,805,780 தேயிலைச் சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் தேயிலைச் சபையின் கணக்குகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,114,630 ஆக இருந்தனால் ரூபா 691,150 தொகையான வித்தியாசம் காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை.

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | வழங்கப்படாத சான்று |
|---|---|---|
| பதவியினர் கடன் | 40,334 | விபரமான பட்டோலை / மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |
| கடன் கொடுத்தோர் | 532,872 | விபரமான பட்டோலை / மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |
| சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதிகள் | 649,681 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,195,377 தொகையான கடன்கொடுத்தோர்களில் ரூபா 1,157,574 தொகை 05 ஆண்டுகளுக்கு மேல் காணப்பட்ட போதிலும் அந்த மீதியை அறவீடு செய்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) புனித கும்பஸ் தேயிலைத் தோட்டத்தின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா 2,303,788 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக அடிப்படையில் பதில் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் வதிவிட பொறியியலாளர் பதவி, சிரேஸ்ட கணக்காய்வாளர் பதவி மற்றும் பிரிவுத்தலை வர் பதவி ஆகிய 04 பதவிகளுக்காக 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. கடந்த 07 ஆண்டுகளில் அந்த உத்தியோகத்தர்களுக்கு சபையினால் பதிற்கடமை படியாக ரூபா 3,722,297 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 9.14 ஆம் பந்தி | மனித வளங்கள் முகாமைத்துவத்திற்கான சட்ட விதிகளை உருவாக்குவது தொடர்பாக ஒரு நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய 2014/புச/1/2016 ஆம் இலக்க தேசிய நூல் நிலைய மற்றும் ஆவணவாக்கல் சேவை சபையின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | 1978 ஆம் ஆண்டிலிருந்து சபையின் தலைமை அலுவலக நூல் நிலையத்தில் புத்தகங்கள் தொடர்பான பௌதீக பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கடந்த 32 ஆண்டு காலத்துக்குள் (1985-2017) இரவல் பெற்ற புத்தகங்களில் 62 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ/05 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் எதுவித நிதி நலன்களும் செலுத்தப்படுவதற்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பொது ஓய்வு பெற்ற 11 உத்தியோகத்தர்களுக்கு எஞ்சியுள்ள ஓய்வு விடுமுறைக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 419,086 செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 5,831,737 பற்றாக்குறை இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையாக ரூபா 6,372,746 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 541,009 முன்னேற்றம் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது செலவுகள் ரூபா 94,965,000 ஆல் அதிகரித்திருந்தும் வருமானம் ரூபா 95,485,000 ஆல் அதிகரித்ததன் காரணமாக நிதி விளைவுகளில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பபகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக பற்றாக்குறை காணப்பட்டது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர்

பணிக்கொடை, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 163,722,445 தொகையான சபையின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 283,946,726 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்தது.

## 3.2 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுமுறையைப் பெற்று வெளிநாடு சென்று மீண்டும் நாட்டுக்கு வருகை தராத 05 உத்தியோகத்தர்களால் ரூபா 18,552,991 தொகையான பிணை மீறல்கள் தொடர்பாக சபையினால் 7 ஆண்டுகளுக்கு முன்னர் வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் அவை மீளாய்வாண்டின் இறுதி வரையும் விசாரிக்கப்பட்டுவந்தன.

(ஆ) வெளித்தரப்பினர்களால் மூன்றாம் குற்றவாளியாகக் குறிப்பிட்டு காணியை சுவீகரித்தமைக்காக 2012 ஆம் ஆண்டின் போதும் சபையின் ஒரு ஊழியரால் முன்னர் வகித்த பதவியில் மீண்டும் சேவை வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டின் போதும் சபைக்கு எதிராக இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

தேயிலை ஆராய்ச்சி சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

(அ) 2013, 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டினைந்த திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆராய்ச்சிகள் 185 ஆகும். அவற்றில் திறைசேரியிடமிருந்து வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மானியத்தில் ரூபா 12,472,481 செலவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 12 ஆராய்ச்சிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 24,350,677 செலவில் ஆரம்பிக்கப்பட்ட 15 ஆராய்ச்சிகள் பிற்போடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த ஆராய்ச்சிகளை கைவிடுதல் அல்லது பிற்போடுதல் இடம் பெற்று 03 ஆண்டுகள் அளவில் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் உயிரியல் இரசாயனப் பிரிவினால் ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்ட மொத்தப் பெறுமதியின் அடிப்படையிலான 10 தேயிலை உற்பத்திகள் (Tea wine, intant black tea, carbonated tea, scented tea, instant milk tea, tea sauce, tea baby soap, tea seed oil, tea protein catching, extract) வணிகமயப்படுத்துவதற்கான மேம்படுத்தல்களை மேற்கொள்வதற்கான பகிரங்கப்படுத்தல், ஆக்க உரிமை உத்தரவுப் பத்திரம், என்பவற்றை பெற்றுக்கொள்ளும் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணமாக அந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் துறைக்கு போய்ச்சேருதல் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) தேயிலைத் துறையில் காணப்படுகின்ற பிரதான சிக்கலாகிய தேயிலைப் பயிர்ச்செய்கையின் உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல், நிலத்தின் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய விடயங்களுக்காக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தும் இச் சிக்கலுக்காக 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை சபையின் மூலம் தீர்வு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) ஆலோசனை மற்றும் விநியோகப் பிரிவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற புதிய தேயிலை மாற்றுப் பயிர்ச்செய்கைக்குரிய தண்டுகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாய்ப் பயிர் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வருடாந்தம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மதிப்பிடப்பட்ட தண்டுகளின் அளவில் பகிர்ந்தளிக்கப்பட்ட தண்டுகளின் அளவு முறையே 58 சதவீதம் 59 சதவீம் மற்றும் 55 சதவீதமாக இருந்ததனால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்திருக்கவில்லை.

(உ) சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்ற புனித கும்பஸ் மற்றும் புனித ஜோக்கிம் தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிலும் கடந்த ஆண்டிலும் புனித கும்பஸ் மற்றும் புனித ஜோக்கிம் ஆகிய இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகளில் தொழிலாளர் வினைத்திறன், விறகுப் பயன்பாடு, மின்சாரப் பிரிவின் வினைத்திறன், என்பன எதிர்பார்த்த மட்டத்தை அடைந்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திக் கிரயம் முறையே ஒரு கிலோகிராம் தேயிலைக்கு ரூபா 569 மற்றும் ரூபா 603 ஆக இருந்தும் முன்னைய ஆண்டில் அவை ரூபா 509 மற்றும் ரூபா 487 ஆக இருந்ததனால் உற்பத்திக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது புனித ஜோகிம் தொழிற்சாலையின் உற்பத்தி விகிதம் 20.92 சதவீதமாக இருந்ததனால் 21.5 சதவீதமாகிய சிறந்த உற்பத்தி மட்டத்தைப் பேணுவதற்கு முடியாதிருந்தது.

(iii) புனித ஜோகிம் தேயிலைத் தொழிற்வாலையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பச்சை தேயிலை கொழுந்தின் உள்ளீடு 1,824,740 கிலோகிறாம்களாக இருந்ததுடன் உள்ளபடியான உள்ளீடு 1,242,696 கிலோகிராம்களாக இருந்ததனால் பாதகமான முரண் 32 சதவீதமாகும். அதன் காரணமாக அதற்கு நேரொத்த பூர்த்தியான தேயிலையின் அளவு குறைவடைந்திருந்தது.

(iv) மீளாயவாண்டில் புனித ஜோக்கிம் தோட்டத்தின் தேயிலைக் கொழுந்தின் விளைதிறனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து காணப்பட்டதானல் தேயிலைப் பயிர்ச்செய்கையின் மூலம் ரூபா 3,028,252 நட்டம் அடையப்பட்டிருந்தது. மேலும் அத்தோட்டத்தில் இறப்பர் விற்பனையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 2,556,840 ஆக இருந்தும் செலவுகள் ரூபா 2,620,973 ஆக இருந்ததனால் கிரயத்தை உள்ளடக்குவதற்கு வருமானம் போதியதாக இருக்கவில்லை.

(v) முன்னைய ஆண்டில் ரூபா 62,807 வருமானத்தை உழைத்த புனித ஜோக்கிம் தோட்டத்தின் நாற்று மேடைகள் மீளாய்வாண்டில் ரூபா 828,787 வருமானத்தை மிகைத்த கிரயம் ஏற்பட்டிருந்தது. நாற்று மேடைக் கட்டுப்பாடு உரிய முறைப்படி நடைமுறைப்படுத்தப்படாதிருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ஏதாவதொரு செயற்பாட்டிற்காக ஒரு வெளியார் நிறுவனத்திற்கு முற்பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் உரிய செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது 2011 ஆம் ஆண்டின் போது மத்துகம பிரதேச செயலகத்திற்காக நீர் தொடர்புபட்ட ஒரு அலகை கொள்வனவு செய்வதற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 110,124 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும், அந்த நிறுவனம் மூடப்பட்டிருந்தமை அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புனித ஜோக்கிம் தோட்டத்திற்குரிய 8.74 ஹெக்டயர்களான வயல் காணி நீண்டகாலமாக குத்தகைகாரர்களால் பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வந்ததுடன் அதிலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் கட்புலனாகாத சொத்துக்களின் கீழ் சர்வதேச நியமங்கள் தாபன (ISO) சான்றிதழாக ரூபா 2,382,613 காட்டப்பட்டிருந்தும் அது 2014 ஆம் ஆண்டிலிருந்து காலாவதியாகியிருந்ததுடன் அப்பெறுமதியை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் தெனியாய மற்றும் கொட்டவ பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள காணிகளினதும் தேயிலை ஆராய்ச்சி சபையின் தெற்கு நிலையம் நிர்மாணிக்கப்பட்ட காணியினதும் உரிமையை சபைக்கு ஒப்படைப்பதற்கு 2018 யூன் 20 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 வெளிப்படையான ஒழுங்கீனம்**

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கையின் பிரகாரம் புனித கும்பங் தேயிலைத தொழிற்சாலையின் உள்நாட்டு தேயிலை விற்பனைப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல் சம்பந்தமாகக் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான நிலையில் இருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விற்பனை நிலையத்தின் பொறுப்பாளரால் ரூபா 8,085,212 பணம் ஒழுங்கீனம் செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**4.4 நிதியத்தை பயன்படுத்துதல்**

தேயிலை மீள்பயிர்ச்செய்க்கைகாக முன்னைய ஆண்டின் போது தேயிலைச் சபையிடமிருந்து கிடைத்த ரூபா 359,975 மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் 13 "டீ" தொகுதி உத்தியோகபூர்வ இல்லங்களும் 1 "சீ" தொகுதி உத்தியோகபூர்வ இல்லமும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) புனித கும்பஸ் தோட்டத்தினதும் புனித ஜோக்கிம் தோட்டத்தினதும் இயந்திரங்களின் இயலளவு ஒரு நாளுக்கு முறையே பச்சை தேயிலை கொழுந்து 8,000 கிலோகிறாம் 15,000 கிலோகிறாம் ஆகும். எவ்வாறாயினும், அந்த இயற்திரங்களின் உள்ளபடியான சராசரி பயன்பாடு முறையே ஒரு நாளுக்கு 5,000 கிலோகிறாம் மற்றும் 6,253 கிலோகிறாம்களாக இருந்ததனால் அந்த இயந்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) புனித ஜோக்கிம் தொழிற்சாலையில் விறகைப் பயன்படுத்தி தேயிலைக் கொழுந்துகளை உலரவைக்கும் இயந்திரங்களைப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டதன் காரணமாக எரிபொருளைப் பயன்படுத்தி தேயிலைக் கொழுந்துகளை உலரவைக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. மேலும் அத்தொழிற்சாலைகளில் காணப்பட்ட ஸ்டேக்ஸ் எஸ்டேக்டர் இயந்திரமும் 04 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேயிலையை செயன்முறைப்படுத்துவதற்காக நிறுவனத்தினால் 1982 ஆம் ஆண்டின் போது ரூபா 4,142,173 செலவு செய்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பல ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.6 ஆளணி நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரித்த பதவியணியினர் 443 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 257 ஆக இருந்ததனால் 186 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறைவேற்றுத்தரமற்ற மட்டத்திலுள்ள 94 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்ப உத்தியோகத்திரின் மற்றும் விஸ்தரிப்பு உத்தியோகத்தரின் முறையே 26 பதவிகள் 18 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமை சபையின் ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை திட்டங்களின் பிரகாரம் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தது.

(ஆ) சபையின் அங்கீகரித்த பதவியணிக்குள் இல்லாத நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (ஓ.ஐ.சீ) பதவிக்காக 06 உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு படியாக 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 1,241,371 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 நவம்பர் 12 ஆந் தகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அன்றிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 112 உத்தியோகத்தர்களுக்கு (ஆரம்ப தரத்திலுள்ள 105 பதவிகள் மற்றும் 07 முகாமைத்துவ உதவியாளர் பதிவிகள்) 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியிலிருந்து அமுக்கு வரும் வகையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தும் இப்பதவி நிறுவனத்தின் அங்கீகரித்த பதவியணிக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 வாகனப்பயன்பாடு

மீளாய்வாண்டின் போது ரூபா 404,965 செலவு செய்து சபைக்குச் சொந்தமான லொறியின் இன்ஜின் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நடவடிக்கையின் பின்னர் 5000 கிலோமீற்றர் ஓட வேண்டிய போதிலும் 3237 கிலோ மீற்றர்கள் மாத்திரம் ஓடியதன் பின்னர் பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்காக இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபையால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆயத்தமாகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகளைக் கொண்டிருக்காததன் காரணமாக இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தமாகும் நடைமுறை மிகவும் மெதுவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 19 ஆம் இலக்க பெறுகை பின்சேர்க்கையின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மிகையான வாகன திருத்தங்களுக்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,235,424 தொகையான 05 வாகன திருத்தங்களுக்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம், செலவுகளுக்கிடையே 11 சதவீதத்திலிருந்து 741 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6.3 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

சபையினால் ஒவ்வொரு விடயங்களுக்குரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய ஒத்த நிறுவனங்களின் வரப்பிரசாரங்களை பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற விடுமுறை, உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அவற்றில் பயன்படுத்தப்படுகின்ற நீர், மின்சாரம் என்பவற்றிற்காக கட்டணங்கள் அறவிடாமை ஆகிய நலன்கள் சம்பந்தமாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுபாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமை. |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் பழுதுபார்த்தல்கள் முறையாக இடம் பெற்றிருக்காமை. |
| (இ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்காமை, பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் சம்பந்தமாக ஜி.ஏ.என் 20 இன் பிரகாரம் பதிவேடு பேணப்படாமை, காப்பகத்தில் வைக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணப்படாமை. |
| (ஈ) | ஆராய்ச்சி நடவடிக்கைகள் | ஆராய்ச்சி நடவடிக்கைகள் முறைப்படியாக முகாமைத்தவம் செய்யப்படாமையும் பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் துறைக்கு வழங்கப்படாமையும் |
| (உ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களிலுள்ள மரங்களின் எண்ணிக்கையை கணித்து பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |